**2026.09.07 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எட்டப்பட்ட முடிவுகள்**

**01. ஜேர்மன் பெடரல் குடியரசின் Helmholtz-Zentrum fur Umweltforschung GmbH-UFZ நிறுவனம் மற்றும் இலங்கையின் ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்திற்கும் இடையில்**

சுற்றாடல் மாதிரி வடிமைப்பு (Ecological Modelling) கணித அணுகுமுறைகள் மற்றும் பாரியளவிலான இடம்சார்ந்த தரவு (Large-scale Spatial Datasets) ஒருங்கிணைத்து உயிர் பல்வகைத்தன்மை தாவரவினங்கள் மற்றும் சுற்றாடல் தொகுதிகளின் இயற்கை ஆற்றல் தொடர்பான மிகவும் ஆழமான புரிதலைப் பெற்றுக் கொடுக்கின்ற புதிய இடம் சார்ந்த சுற்றாடல் கோட்பாடொன்றை அபிவிருத்தி செய்யும் நோக்கில் ஜேர்மன் Helmholtz-Zentrum fur Umweltforschung GmbH-UFZ நிறுவனத்தால் 'SpatioCoexistence-Towards a Spatial Coexistence Theory for Species Rich Community' எனும் ஆய்வுக் கருத்திட்டமொன்றை அமுல்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இலங்கையின் ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம் குறித்த கருத்திட்டத்திற்குரிய சுற்றாடல் தரவுகளை வழங்குவதற்கு மற்றும் ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக விசேட நிபுணத்துவ துணை ஒப்பந்தக்காரராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இப்பணிக்குரிய இருதரப்பினருக்கிடையில் ஒப்பந்தமொன்றில் கையொப்பமிடுவதற்கு முன்மொழியப்பட்டுள்ளதுடன், அதன்மூலம் இருதரப்பினருக்கும் இடையில் உடன்பாடு எட்டப்பட்ட ஆய்வுப் பணிகளை அமுல்படுத்துவதற்காக ஐந்தாண்டு காலப்பகுதிக்கு 50,000 யூரோக்கள் வரைக்குமான நிதியைப் பெற்றுக் கொள்வதற்கு ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்திற்கு வாய்ப்புக் கிடைக்கும். குறித்த ஒப்பந்தத்தின் மூலம் அறிவுப் பரிமாற்றம், நவீன விஞ்ஞானபூர்வமான அணுகுமுறைகளைப் பெற்றுக்கொள்வதற்கு, இலங்கை ஆய்வாளர்களின் இயலளவை விருத்தி செய்தல் மற்றும் ஒருங்கிணைந்த விஞ்ஞானபூர்வமான கூற்றுக்களை உருவாக்குதல் போன்ற பணிகளை மேற்கொள்வதற்கும், ஒவ்வொரு தரப்பினர்களிடம் தற்போதுள்ள அறிவு மற்றும் தகவல்களுக்கான உரித்தைப் பாதுகாத்து இவ் ஒத்துழைப்புக்கள் மூலம் உருவாகின்ற புதிய ஆய்வுப் பெறுபேறுகள் தொடர்பாக இருதரப்பினரின் உரித்தையும் உறுதிப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கமைய, ஜர்மன் ∴பெடரல் குடியரசின் Helmholtz-Zentrum fur Umweltforschung GmbH-UFZ நிறுவனம் மற்றும் இலங்கையின் ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்திற்கும் இடையில் குறித்த ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்காக கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சராக கௌரவ பிரதமர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.



163, කිරුළපන මාවත, කොළඹ 05, ශ්‍රී ලංකාව.
163, கிருலபன எவனியூ, கொழும்பு 05, இலங்கை.
163, Kirulapona Avenue, Colombo 05, Sri Lanka.
දු තො T - (+94 11) 2515759
ෆැ පෙ F - (+94 11) 2514753
ඊ மி E - dg@dgi.gov.lk
www.dgi.gov.lk
www.news.lk

**02. இலங்கைக்கும் தாய்லாந்துக்கும் இடையிலான தொழில்சார் ஒத்துழைப்புக்கள் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கும் இலங்கை தொழிலாளர்கள் தாய்லாந்தில் தொழில்களில் ஈடுபடுத்துதல் தொடர்பான ஒப்பந்தத்தில் கையொப்பமிடல்**

தொழிலுக்கான புலம்பெயர் தொடர்பான இருதரப்பு ஒத்துழைப்புக்களை ஏற்படுத்திக் கொள்ளும் நோக்கில், இலங்கைக்கும் தாய்லாந்துக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளில் தொழில்சார் ஒத்துழைப்புக்கள் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் மற்றும் அதற்கு குறைநிரப்பாக இலங்கை தொழிலாளர்கள் தாய்லாந்தில் தொழிலில் ஈடுபடுத்துதல் தொடர்பான ஒப்பந்தத்தில் இருதரப்பினருக்கும் இடையில் கையொப்பமிடுவதற்கு உடன்பாடு எட்டப்பட்டுள்ளது. உத்தேச ஒப்பந்தங்களில் கையொப்பமிடுவதன் மூலம் தொழில் துறைகளில் இரு நாட்டின் உரிய அதிகாரிகளுக்கிடையில் உத்தியோகபூர்வ ஒத்துழைப்புக்களை நிறுவுதல், எமது நாட்டின் தொழிலாளர்களை தாய்லாந்துக்கு அனுப்புதல் மற்றும் கொண்டு வருதலை வெளிப்படைத்தன்மையுடனும், வினைத்திறனாகவும் மேற்கொள்வதற்கு கட்டமைப்பு ரீதியான பொறிமுறையொன்றை நிறுவுதல், தாய்லாந்தில் தொழில்களில் ஈடுபட்டுள்ள எமது நாட்டு தொழிலாளர்களின் சட்டபூர்வமான உரிமைகள், நலனோம்புகை மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்தல் மற்றும் மனித வஞ்சகக் கடத்தலைத் தடுத்தல் போன்ற பணிகளை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கமைய, ஐந்தாண்டு காலப்பகுதிக்கு இலங்கைக்கும் தாய்லாந்துக்கும் இடையில் தொழில்சார் ஒத்துழைப்புக்கள் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் மற்றும் இலங்கை தொழிலாளர்களை தாய்லாந்தில் தொழில்களில் ஈடுபடுத்துதல் தொடர்பான ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்காக வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**03. தேசிய வர்த்தக பேச்சுவார்த்தைக் குழு மற்றும் வர்த்தக கொள்கை ஆலோசனை குழுவை தாபித்தல்**

இலங்கையின் தற்போதைய சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் மற்றும் சுதந்திர வர்த்தக் ஒப்பந்தங்களின் தொடர் நடவடிக்கைகள் தொடர்பான மீளாய்வுகளை மேற்கொள்வதற்காக குழுவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விதந்துரைகளை அமுல்படுத்துவதற்காக 2026.08.24 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இவ்விதந்துரையைக் கருத்தில் கொண்டு, தொடர்ந்து வரும் காலங்களில் சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்கள் பற்றிய பேச்சுவார்த்தைகளை நடாத்துவதற்காக இலங்கை மிகவும் இலக்குகளை அடிப்படையாகக் கொண்ட, தொடர்ச்சித்தன்மை கொண்ட மற்றும் ஆதாரபூர்வமான அணுகுமுறையைக் கடைப்பிடிப்பதற்கும், அதற்காக நிலைபேறான அர்த்தமுள்ள பங்காளர்களின் ஆலோசனைச் செயன்முறையை உறுதிப்படுத்துவதற்கு இயலுமாகும் வகையில் தேசிய வர்த்தக பேச்சுவார்த்தைக் குழு மற்றும் வர்த்தக கொள்கை ஆலோசனைக் குழுவை தாபிக்க வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய, கீழ்க்காணும் வகையில் செயலாற்றுவதற்காக வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது :

- ஆற்றல் வளங்கொண்ட இருதரப்பு அல்லது பிராந்திய வர்த்தக பங்காளர்களுடன் மேற்கொள்ளப்படும் வர்த்தக பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதற்கான தேசழய வர்த்தக பேச்சுவார்த்தைக் குழுவை தாபித்தல்
- வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் தேசிய வர்த்தக பேச்சுவார்த்தைக் குழுவின் தலைவராகவும் மற்றும் பிரதான தேசிய பேச்சுவார்த்தையாளராக நியமித்தல்.
- தேசிய வர்த்தக பேச்சுவார்த்தை குழுவின் கீழ் தேவையான தொழிநுட்ப செயற்பாட்டுக் குழுவுடன் 12 விடயதான உபகுழுக்களைத் தாபித்தல்
- தேசிய வர்த்தக பேச்சுவார்த்தைக் குழுவுக்கு, அதன் அதன் செயற்பாடுகள் மற்றும் தொழிநுட்பத் துறைகள் தொடர்பாக ஆலோசனைகளை வழங்குவதற்கும், வர்த்தக ஒப்பந்தங்களுக்கு குறித்த விடயங்கள் தொடர்பாக விதந்துரைகளைச் சமர்ப்பிப்பதற்கும், சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்கள் தொடர்பாக நிலைபேறான கருத்துக்களைக் கேட்டறிதல் மற்றும் தொடர்பாடல் பொறிமுறையை உறுதிப்படுத்துவதற்கும் வர்த்தக நிபுணர்கள், வர்த்தகத் துறைசார்ந்த ஆய்வாளர்கள், வர்த்தக சமூகத்தவர்கள், தொழிற் சங்கங்கள், சிவில் சமூகத்தவர்கள் மற்றும் ஏற்புடைய அரச அலுவலர்களுடன் கூடிய வர்த்தகக் கொள்கைக் குழுவை நியமித்தல்.
- சர்வதேச வர்த்தம் தொடர்பான விடயதான அமைச்சர் மற்றும் கைத்தொழில்துறை விடயதான அமைச்சர் வர்த்தக் கொள்கை ஆலோசனைக் குழுவின் இணைத்தலைவர்களாக செயலாற்றுதல்.

**04. தாங்குதிறன் கொண்டதும், அனைவரையும் உள்ளடக்கியதுமான பொருளாதார பொருளாதார வாய்ப்புக்களை ஊக்குவிக்கின்ற பேரண்ட மீளமைப்பு துறைசார் அபிவிருத்தி வேலைத்திட்டத்தை அமுல்படுத்தல்**

எமது நாட்டு சனத்தொகையில் 56% சதவீதமானவர்கள் பல்வேறுபட்ட இடர் நிலைமைகளுக்கு முகங் கொடுத்து வருவதுடன், அவ்வாறான நிலைமை குறிப்பாக பெண்கள், இளைஞர்கள், முதியோர், இயலாமைக்குட்பட்ட நபர்கள் மற்றும் கிராமிய மற்றும் பெருந்தோட்டங்களிலுள்ள சமூகங்களைப் பெரிதும் பாதிக்கின்றது. காலநிலை மாற்றத்தால் இந்நிலைமை மேலும் தீவிரமடைவதால், சமூகப் பாதுகாப்பு, தொழில் வாய்ப்புக்கள் மற்றும் வருமான வழிகள் மற்றும் முதியோர் பராமரிப்புச் சேவைகளைப் பலப்படுத்த வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய, ஆசிய அபிவிருத்தி வங்கியின் 100 மில்லியன் டொலர் கடன் தொகையின் கீழ் தாங்குதிறன் கொண்ட மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய பொருளாதார வாய்ப்புக்களை ஊக்குவிக்கின்ற பேரண்ட மீளமைப்பு துறைசார் அபிவிருத்தி வேலைத்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வேலைத்திட்டம் கேகாலை, மாத்தளை, முல்லைத்தீவு, கிளிநொச்சி, மட்டக்களப்பு மற்றும் நுவரெலியா போன்ற 06 மாவட்டங்களில் 2026 நவம்பர் மாதம் தொடக்கம் 2031 ஒக்டோம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்வேலைத்திட்டம் கொள்கை மற்றும் முதலீடு எனும் 02 கூறுகளாக கீழ்க்காணும் 03 துறைகளை உள்ளடக்கியவாறு அமுல்படுத்தப்படவுள்ளது :

- **தொழில் வாய்ப்புக்கள் மற்றும் வருமான வழிகள் சேவைகளை உள்ளடக்கம் மற்றும் தரப்பண்பை அதிகரித்தல்** - வேலைத்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படும் 06 மாவட்டங்களில் தேர்ந்தெடுக்கப்படுகின்ற 30,000 அஸ்வெசும பயனாளிக் குடும்பங்களுக்கு முறையான வாழ்வாதார அபிவிருத்தி மற்றும் தொழில்முயற்சிப் பயிற்சிகளின் பின்னர் தொழில்முயற்சி அபிவிருத்தி ஒத்துழைப்புக்கள், சந்தை மற்றும் நிதி வசதிகள் மற்றும் 200,000 ரூபாய்கள் ஆரம்ப மூலதனக் கொடுப்பனவை இரண்டு தவணைகளில் வழங்கல்.
- **சமூக நலனோம்புகை உட்கட்டமைப்பு வசதிகள், சேவைகள் மற்றும் தரநிர்ணயங்களை மேம்படுத்தல்** - முதியவர்களுக்கு தரப்பண்பான மற்றும் நியாயமான சமூகப் பராமரிப்பு சேவைகளை வழங்குவதற்கான ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் நிறுவன ரீதியான சூழலைப் பலப்படுத்துவதற்கு ஒழுங்குபடுத்தல் முறைமை மற்றும் சேவை தரநிர்ணயங்களை அறிமுகப்படுத்தல், பயிற்சி பெற்ற பராமரிப்பு தொழிற்படையை உருவாக்குதல் மற்றும் நிலைபேறான மற்றும் தரப்பண்பான நீடித்திருக்கக்கூடிய முதியோர் பராமரிப்பு சேவைகைளை உருவாக்குவதற்காக 05 முதியோர் பகல் பராமரிப்பு நிலையங்களை நிறுவுதல்.
- **அனைவரையும் உள்ளடக்கியதும், பதிலளிப்புக்களுடன் கூடிய சமூகப் பாதுகாப்பு முறைமையை உருவாக்குதல் மற்றும் நிறுவன ரீதியான இயலளவுகளை அபிவிருத்தி செய்தல்** - சமூகப் பாதுகாப்பு துறையில் கொள்கை ரீதியானதும் மற்றும் நிறுவன ரீதியான சூழலைப் பலப்படுத்துவதற்கு தேசிய சமூகப் பாதுகாப்பு கொள்கை (2023) மற்றும் மூலோபாயத்தின் அடிப்படையில் சமூகப் பாதுகாப்பு செயற்பாட்டுத் திட்டம் (2025) மற்றும் சம்பவ முகாமைத்துவப் பணிச்சட்டகத்தைத் தயாரித்தல், டிஜிட்டல் மற்றும் தரவுக் கட்டமைப்பை நிறுவுதல், இணையவழிப் பாதுகாப்பு மற்றும் தரவுப் பாதுகாப்பு தரநிர்ணயங்களை அறிமுகப்படுத்தல் மற்றும் கூட்டானதும் ஒருங்கிணைந்த சேவைகளை வழங்குவதற்கான நிறுவன ரீதியான இயலளவு விருத்தி உள்ளிட்ட கண்காணிப்பு, தொடராய்வு மற்றும் கற்றல் முறைமையொன்றை நிறுவுதல்

அதற்கமைய, கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமுதாய வலுவூட்டல் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கமைய மேற்குறிப்பிட்ட வகையில் தாங்குதிறன் கொண்டதும், அனைவரையும் உள்ளடக்கியதுமான பொருளாதார பொருளாதார வாய்ப்புக்களை ஊக்குவிக்கின்ற பேரண்ட மீளமைப்பு துறைசார் அபிவிருத்தி வேலைத்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 05. அனர்த்த சலுகைக் கடன் திட்டத்தை அமுல்படுத்துவதிலுள்ள முன்னேற்றம்

தித்வா புயல் அனர்த்த நிலைமையால் பாதிக்கப்பட்டுள்ள நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழிற்முயற்சித் துறைகளை மீளவும் முனைப்பாக ஆரம்பிப்பதற்கு அனர்த்த சலுகைக் கடன் திட்டத்தை (RE – MSME Disaster Relief) அமுல்படுத்துவதற்கும், அனர்த்தத்திற்குள்ளாகிய தொழில்முயற்சிகளுக்கு நிதியுதவியை வழங்குவதற்கு விரிவான அனர்த்த நிவாரணம் (EDR) கடன் திட்டத்தை அமுல்படுத்துவதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது. குறித்த கடன் திட்டத்தை 2025 மற்றும் 2026 ஆம் ஆண்டுகளில் அமுல்படுத்துவதற்கு 10,000 மில்லியன் ரூபாய்கள் ஒதுக்கப்பட்டுள்ளது. அனர்த்தத்தின் பின்னர்

அனைத்து தொழில்முயற்சிகளையும் துரிதமாக ஆரம்பிப்பதற்கு துரித நிதியுதவியை வழங்கல் மற்றும் நாட்டின் பொருளாதாரத்தை துரிதமாக மீள்நிலைக்குக் கொண்டு வருவதையும் நோக்கமாகக் கொண்டு, 2026 ஆம் ஆண்டு தொடக்கம் குறித்த 02 கடன் திட்டங்களையும் ஒருங்கிணைந்த வேலைத்திட்டமாக அமுல்படுத்தப்பட்டுள்ளது. அதற்கமைய, குறித்த கடன் திட்டத்தின் கீழ் 15 பங்காள நிதி நிறுவனங்களின் உதவியுடன் தித்வா அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட 3,968 தொழில் முயற்சியாளர்களுக்கு 8,061.4 மில்லியன் ரூபாய்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இக்கடன் திட்டம் அமுல்படுத்தப்படுவதிலுள்ள முன்னேற்றம் தொடர்பான தகவல்கள் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக கௌரவ ஜனாதிபதி அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அமைச்சரவை குறித்த தகவல்களை கருத்தில் எடுத்துள்ளது.

**06. நிலைபேறான சுற்றுலாத் துறை அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் விபரங்களுடன் கூடிய திட்டத்தைத் தயாரித்தல் மற்றும் அமுல்படுத்தல் வசதிகளை வழங்குவதற்கான ஆலோசனை சேவைகளின் பெறுகை**

ஆசிய அபிவிருத்தி வங்கியின் 30 மில்லியன் டொலர்கள் கடன் தொகையின் கீழ் அமுல்படுத்தப்படும் நிலைபேறான சுற்றுலாத் துறை அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் தம்புள்ள (சிகிரியா) மற்றும் திருகோணமலை போன்ற பிரதேசங்களில் வசதிகளை மேம்படுத்தல், தேர்ந்தெடுக்கப்பட்ட கவர்ந்திழுக்கக்கூடிய இடங்களை அண்டிய பிரதேசங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மீள்கட்டமைத்தல் மற்றும் மேம்படுத்தல் போன்ற பணிகளை மேற்கொள்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வேலைத்திட்டத்தின் விபரங்களுடன் கூடிய திட்டத்தைத் தயாரித்தல் மற்றும் கருத்திட்டத்தை அமுல்படுத்துவதற்கான வசதிகளை வழங்குவதற்கான ஆலோசனை சேவைகள் நிறுவனத்தைத் தேர்ந்தெடுப்பதற்காக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு கேள்வி விருப்பப் பத்திரங்களைக் கோரியுள்ளது. அதற்கு 15 ஆலோசனை நிறுவனங்கள் சமர்ப்பித்துள்ள கேள்வி விருப்பப் பத்திரங்களை மதிப்பீடு செய்த பின்னர், 06 நிறுவனங்களிடம் கருத்திட்ட முன்மொழிவுகளைக் கோரியுள்ளது. அதற்கமைய, 05 முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், இவற்றை மதிப்பீடு செய்த பின்னர், M/s Resources Development Consultants (Pvt) Ltd (Srilanka), in association with M/s Novel International Consulting Enterprise (Pvt) Ltd (Srilanka) இற்கு குறித்த ஆலோசனை சேவை ஒப்பந்தத்தை 173.86 மில்லியன் ரூபாய்களுக்கு (பெறுமதி சேர் வரியின்றி) வழங்குவதற்கு அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள ஆலோசனை பெறுகைக் குழு விதந்துரைத்துள்ளது. இவ்விதந்துரைகளுக்கமைய குறித்த ஆலோசனை சேவைகள் ஒப்பந்தத்தை வழங்குவதற்கு போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**07. சுகததாச தேசிய விளையாட்டு கட்டிடத்தொகுதி அதிகாரசபையின் கீழுள்ள 400 மீற்றர், 200 மீற்றர் மற்றும் 80 செயற்கை ஓட்டப்பாதைகளை மீள்செப்பனிடும் பெறுகை**

சுகததாச தேசிய விளையாட்டு கட்டிடத்தொகுதி அதிகாரசபையின் கீழுள்ள 400 மீற்றர், 200 மீற்றர் மற்றும் 80 மீற்றர் செயற்கை ஓட்டப்பாதையை மீள் செப்பனிடும் கருத்திட்டம் 1,062.543 மில்லியன் ரூபாய்கள் மதிப்பீட்டுச் செலவில் அமுல்படுத்துவதற்காக 2025.10.21 மற்றும் 2026.03.03 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் அங்கீகாரம்

வழங்கப்பட்டுள்ளது. இக்கருத்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக ஒப்பந்தக்காரரைத் தேர்ந்தெடுப்பதற்காக சர்வதேச போட்டி பெறுகை முறையைக் கடைப்பிடித்து விலைமனுக்கள் கோரப்பட்டுள்ளதுடன், அதற்காக 03 விலைமனுக்கோரல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இவ்விலைமனுக்களை மதிப்பீடு செய்த பின்னர், தகைமை பெற்றுள்ள ஒரேயொரு விலைமனுதாரரால் கருத்திட்டத்தின் மதிப்பீட்டுத் தொகையை விடவும் 70மூ சதவீதம் அதிகமான விலைமனு சமர்ப்பிக்கப்பட்டுள்ளமையைக் கருத்தில் கொண்டு, இப்பெறுகைக்கு மீண்டும் விலைமுறிகளைக் கோருவதற்காக உயர்மட்ட பெறுகைக்குழுவால் விதந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. குறித்த பெறுகையின் அடிப்படையில் சுகததாச தேசிய விளையாட்டு கட்டிடத்தொகுதி அதிகாரசபையின் கீழ் 400 மீற்றர், 200 மீற்றர் மற்றும் 80 மீற்றர் செயற்கை ஓட்டப்பாதைகளை மீள்செப்பனிடல் கருத்திட்டத்தை அமுல்படுத்துவதற்குப் பொருத்தமான ஒப்பந்தக்காரரைத் தேர்ந்தெடுப்பதற்காக மீண்டும் விலைமனுக்களைக் கோருவதற்கு இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுக்கள் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 08. 50 ஆவது தேசிய விளையாட்டு விழாவுக்கு இணையாக 'Colombo Marathon – 2026' போட்டியை நடாத்துதல்

50 ஆவது தேசிய விளையாட்டு விழாவுக்கு இணையாக விளையாட்டுக் கலாச்சாரம் மற்றும் சுற்றுலாத்துறையை ஊக்குவிக்குட் நோக்கில் இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுக்கள் அமைச்சு, விளையாட்டு அபிவிருத்தி திணைக்களம் மற்றும் ஏனைய ஏற்புடைய நிறுவனங்களுடன் இணைந்து எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 13 ஆம் திகதி கொழும்பு, காலி முகத்திடல் விளையாட்டுத் திடலில் 'Colombo Marathon – 2026' எனும் பெயரிலான சர்வதேச மரதன், 10 கிலோமீற்றர் மற்றும் 5 கிலோமீற்றர் FUN Run ஆக போட்டிகளை உள்ளடக்கிய இப்போட்டித் தொடருக்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விளையாட்டு வீரர்கள் பலர் போட்டிகளில் கலந்து கொள்வார்களென எதிர்பார்க்கப்படுகின்றது. இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுக்கள் அமைச்சர் அவர்கள் குறித்த போட்டிகளை அமுல்படுத்தும் திட்டம், வெற்றியாளர்களுக்கு வழங்கப்படும் பரிசுத் தொகை மற்றும் போட்டிகளை நடாத்தும் வழிமுறைகள் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள விடயங்களை அமைச்சரவை கருத்தில் கொண்டுள்ளது.

### 09. தேசிய டிஜிட்டல் பொருளாதார திட்டத்தைத் தயாரிப்பதற்காக அரச நிறுவனங்களில் டிஜிட்டல் அபிவிருத்திஅலகைத் தாபித்தல்

தேசிய டிஜிட்டல் பொருளாதாரத் திட்டம் 2025—2030 இற்கான 2025.10.21 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. குறித்த திட்டத்தை அமுல்படுத்துவதற்கு துறைசார் டிஜிட்டல் அபிவிருத்தி நிர்வகிப்பதற்கு மற்றும் தேசிய டிஜிட்டல் பொது வசதிகள் தொடக்க முயற்சிகளுடன் இணங்கியொழுகும் தன்மையை உறுதிப்படுத்துவதற்கு இயலுமாகும் வகையில் அரச நிறுவனங்களில் பலம்வாய்ந்த மற்றும் தரநிர்ணயமான நிறுவனப் பொறிமுறையொன்றை தாபிக்க வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய, டிஜிட்டல் அபிவிருத்தியை சரியான வகையில் தொழிற்படுத்துவதற்கும் மற்றும் ஒருங்கிணைப்புச் செய்வதற்கும் வேறானதொரு அலகாக அனைத்து அரச நிறுவனங்களில் 'டிஜிட்டல் அபிவிருத்தி அலகு எனும் பெயரிலான

அலகொன்றைத் தாபிப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. இவ்வலகைத் தாபித்தல் மற்றும் இயக்குதல் கட்டமைப்பை உள்ளடக்கிய டிஜிட்டல் அபிவிருத்தி அலகு பணிச்சட்டகம் (Refeerence Gramework) GovTech ஸ்ரீலங்கா (தனியார் ) கம்பனியால் தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பணிச்சட்டகத்திற்கமைய நிறுவனப் பிரதானிக்கு நேரடியாக அறிக்கையிடும் பிரதம டிஜிட்டல் அலுவலர் ஒருவர் (Chief Digital Office) டிஜிட்டல் அபிவிருத்தி அலகின் பிரதானியாக நியமிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. அத்துடன், இவ்வலகின் மூலம் தொழில்முயற்சி ஆக்கத்திறன், தரவுகள் மற்றும் செயற்கை நுண்ணறிவு ஒத்துழைப்பு, இணையவழிப் பாதுகாப்பு வழிகாட்டி, இடைச்செயற்பாட்டு ஒத்தழைப்பு மற்றும் ஆலோசனைப் பணிகளுக்கான விசேட அறிவு GovTech ஸ்ரீலங்கா (தனியார்) கம்பனியால் அரச நிறுவனங்களுக்குப் பெற்றுக் கொள்வதற்கு வாய்ப்புக்கள் கிட்டும். அதற்கமைய, அரச நிறுவனங்களில் டிஜிட்டல் அபிவிருத்தி அலகை தாபிப்பதற்கு டிஜிட்டல் அமைச்சராக கௌரவ ஜனாதிபதி அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**10. 'வீதிப் பாதுகாப்பு ஜனாதிபதி விருது விழா'**

வீதிப் பாதுகாப்பு செயற்பாட்டுத் திட்டம் 2025-2026 இன் கீழ் இனங்காணப்பட்ட கருத்திட்டமான 'வீதிப் பாதுகாப்பு விருது விழா – 2026' தேசிய மட்டத்தில் நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. குறித்த ஜனாதிபதி விருது விழாவை நடாத்துவதன் மூலம் வீதிப் பாதுகாப்புக்கு நபர்கள், அரச மற்றும் தனியார் நிறுவனங்கள், அமைப்புக்கள் மற்றும் ஏனைய தரப்பினர்கள் காட்டுகின்ற விசேட பங்களிபுக்களைத் தேசிய மட்டத்தில் மதிப்பீடு செய்வதற்கும் வீதிப் பாதுகாப்பு தொடர்பான சமூகக் கவனக்குவிப்பு, பொறுப்புடன் கூடிய நடத்தைகள் மற்றும் பொதுமக்கள் பங்கேற்பை மேலும் அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்வாண்டு நடாத்தப்படவுள்ள ஆரம்ப விருது விழாவின் அனுபவங்கள் மற்றும் பெறுபேறுகளின் அடிப்படையில் நவம்பர் மாதம் 03 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வீதி விபத்துக்களால் பாதிக்கப்பட்டவர்களை நினைவுகூருகின்ற சர்வதேச தினத்தையொட்டி இவ்விழாவை தொடர்ந்துவரும் ஆண்டுகளில் வருடாந்தம் நடாத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதற்கமைய, 'வீதிப் பாதுகாப்பு ஜனாதிபதி விருது விழா – 2026' தேசிய மட்டத்தில் நடாத்துவதற்கும், அதில் தேர்ந்தெடுக்கப்படும் விருதி பெறுபவர்களுக்கு திறமைக்கான விருது மற்றும் ஜனாதிபதி விருது வழங்குவதற்கும் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**11. திட்டமிட்ட குற்றச் செயல்களைத் தடுத்தல் சட்டமூலம்**

இலங்கையில் திட்டமிட்ட குற்றச் செயல்களைத் தடுப்பதற்கான புதிய சட்டமூலத்தை தயாரிப்பதற்காக 2026.03.30 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கியுள்ளது. அதற்கமைய, உள்நாட்டு மட்டத்தைக் கடந்த திட்டமிட்ட குற்றச் செயல்களுக்கு எதிராக ஐக்கிய நாடுகள் சபையின் சமவாயத்தை வலுவாக்கம் செய்வதற்கும், பயனுள்ள தேசிய மற்றும் சர்வதேச ஒத்துழைப்புக்கள் மூலம் மோசமான குற்றங்களைத் தடுத்தல் மற்றும் மோசமான குற்றங்களுக்கு எதிராக செயற்படுவதற்கும், திட்டமிட்ட குற்றச் செயல்களில் ஈடுபடும் குழுக்களால் ஏற்படும் அச்சுறுத்தல்களிலிருந்து சமூகத்தைப் பாதுகாப்பதற்கும் சட்ட ஏற்பாடுகள் வகுப்பதற்கு சட்ட வரைஞரால் திட்டமிட்ட குற்றச்

செயல்களைத் தடுத்தல் சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது. குறித்த சட்டமூலத்திற்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைக்கப்பெற்றுள்ளது. அதற்கமைய, இச்சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்திற்கு சமர்ப்பிப்பதற்கும் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் அவர்களும், பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகார அமைச்சர் அவர்களும் இணைந்து சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

*****

**தமிழ், ஆங்கில மொழிபெயர்ப்புக்களுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள மொழியே மூலமாக அமையும்.**